பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 25 வெள்ளிக்கிழமை 07.02.2025 கதிர் 091

### அமைச்சர்களின் அழுத்தத்தால்

## அரச நிறுவனத் தலைவர்கள் ஆறு பேர்வரை பதவி விலகல்

அமைச்சர்களின் அழுத்தங்களால் குறுகிய காலத்துக்குள் 6 அரச நிறுவனங்களின் தலைவர்கள் பதவி விலகியுள்ளனர். தேசிய மக்கள் சக்திக்குள்காணப்படும்பிரச்சினைகளால் கனிசமான ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும்பதவிவிலகவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

அவர் கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர்களின் அழுத்தங்களாலேயே ஓரிரு மாதங்களுக்குள் 6 நிறுவனத்தலைவர்கள் பதவி விலகியுள்ளனர். தற்போதுள்ள 159 ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் கனிசமானோர் இவ்வாண்டுக்குள் நிச்சயம் பதவி விலகுவார்கள். அமைச்சொன்றின் செயலாளருக்கு எதிராக மேலதிக செயலாளர் ஒருவர் ☞ 8

## 3 புதிய டிஜிட்டல் தளங்கள் இன்று அநுரவால் அறிமுகம்

டிஜிட்டல் சமூகத்தை நோக்கி நாட்டை கொண்டுச் செல்ல பெரும் அடியெடுத்து வைக்கும் வகையிலான 3 புதிய டிஜிட்டல் தளங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு இன்றுஜனாதிபதிஅநுரகுமார திசாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஆளும்தரப்பின் அனைத்துவிதமான கொடுப்பனவுகளையும் டிஜிட்டல் மயமாக்கும் கௌபே (றூநுாஊணபுக்ஷூ) வசதியை நடைமுறைப்படுத்தல், இதுவரையில் கொழும்பு தலைமை அலுவலகத்தில் மாத்திரம் இடம்பெற்ற ஜனாதிபதி ☞ 8

## பலாலி ஓடுபாதையை விரிவாக்க மேலும் காணி அபகரிக்கக்கூடாது

### கஜேந்திரகுமார் தெரிவிப்பு

பலாலி ஓடுபாதையை விரிவாக்குவதற்காக ஒருதலைப்பட்டசமாக காணிகளை அபகரிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தலைவரும், யாழ்.மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஉரையாற்றியஅவர் தெரிவித்ததாவது: ☞ 2



### அரகலய போராட்டத்தில் சேதமான வீடுகளுக்காக

# அரசிடமிருந்து எம்.பிக்கள் கோடிக்கணக்கில் இழப்பீடு

### நாடாளுமன்றத்தில் நேற்று அம்பலம்

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற போராட்டத்தின்போதுஎரிக்கப்பட்ட வீடுகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்ற இழப்பீட்டுப் பட்டியலை அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்டார்.

அதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத்தொகை122.41கோடிரூபாவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட விடயத்தினை வெளிப்படுத்தினார். அவர் தெரிவித்ததாவது:

இவர்களில், கெஹெலிய ரம்புக்வெல்ல 959 மில்லியன் ரூபா இழப்பீட்டைப் பெற்றுள்ளதோடு, ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ 934 மில்லியன் ரூபாவும், காமினி லொக்குகே 749 மில்லியன் ரூபாவும், அலி சப்ரி ரஹீம் 709 மில்லியன் ரூபா மற்றும் நிமல் லன்சா 692 மில்லியன் ரூபாவை இழப்பீட்டுத் தொகையாக பெற்றுள்ளனர் என்று ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

மருத்துவத் துறையில் ஊழல் பற்றிப் பேசிப் பேசியே நாடாளுமன்ற உறுப்பினரானவர் அருச்சுனா. ஆனால், இப்போது அவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினரான அருச்சுனா தனது அண்ணாவின் மகனை தனது ஆய்வு அலுவலராகப் பெயரிட்டு அந்தச் சம்பளத்தையும் தானே பெறுகிறார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார். அனேகமான ☞ 2

## அரிசியின் விலையில் மாற்றமேதுமில்லை

நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளபோதும் அரிசியின் கட்டுப்பாட்டு விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் தற்போதைய கட்டுப்பாட்டு விலை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில்தெரிவித்தார். எனினும் அதிகரித்த விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்அமைச்சர்சபையில்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தி தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயேஅமைச்சர்இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் ☞ 2

## கிரிஷ் கட்டடத்தில் தீ

கொழும்பு - கோட்டையில் உள்ள 60 மாடி கிரிஷ் கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டடத்தின் மேல் தளத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கட்டிடத்தின் 35ஆவது மாடியில் தீ விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தீ கட்டிடத்தின் 6 தளங்களுக்கும் பரவியுள்ளதாகவும், தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்பு பிரிவினர் கடுமையாகப் போராடி வருவதாகவும் கூறப்படுகிறது



## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் அரசியல் தலையீடு தேவையற்றது

### பேராயரின் பேச்சாளர் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுபிரிவினரால்முன்னெடுக்கப்படும் விசாரணைகளில்அரசியல்தலையீடுதேவையற்றது. எனவே இந்த விசாரணைகள் சுயாதீனமாக முன்னெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். குற்றப்புலனாய்வுப்பிரிவு அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து விடக் கூடாது என பேராயர் இல்ல பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி வலியுறுத்தினார். ☞ 2

## கடமை தவறிய சட்டமா அதிபரை ஜனாதிபதி பதவி நீக்கவேண்டும்

### பத்திரிகையாளர் லசந்தவின் மகள் கோரிக்கை

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை வழக்கு தொடர்பில் கடமைதவறியசட்டமாஅதிபருக்குஎதிராக குற்றப்பிரேரணையை சமர்ப்பிக்குமாறு அவரது மகள் அஹிம்சா விக்ரமதுங்க பிரதமர்கலாநிதிஹரினியிடம்கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும்லசந்தவிக்ரமதுங்க கொலைதொடர்பிலானவிசாரணைகளின் சந்தேகநபர்களாகபெயரிடப்பட்டமூவரை விடுவிப்பதற்குகடந்தசிலவாரங்களுக்கு முன்னர் சட்ட மாஅதிபர் பாரிந்த ☞ 8

## மகிந்தவின் மனு மீது மார்ச் 19 விசாரணை

தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை 60 ஆக குறைக்க ஆளும்தரப்பு எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மஹிந்த ராஜபக்சவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர்



நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ☞ 2

## விவசாயிகள் கஸ்டம் புரியாது நெல்லுக்கு விலை நிர்ணயம்

### மட்டு. கமக்கார அதிகார சபை செயலர் கண்டனம்

விவசாயிகளின் நெற்செய்கைக்கான செலவு என்ன, விவசாயிகளின் கஷ்டங்கள் என்ன என்பதை கவனத்தில் கொள்ளாமல், விவசாயிகளின் கோரிக்கைகளைபுறந்தள்ளிவிட்டு இந்த ஆளும்தரப்பு நெல்லுக்கான விலைகளைநிர்ணயித்துள்ளதாக மட்டக்களப்புமாவட்டகமக்காரர்கள் அதிகார சபையின் செயலாளர் நிரஞ்சன் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தம் காரணமாகப்பெரும்நஷ்டங்களை எதிர்கொண்ட விவசாயிகள் அதிலிருந்துமீளமுடியாதநிலையில் உள்ளபோது ஆளும்தரப்பின் இத்தகைய செயற்பாடுகள் கவலையளிப்பதாகவும் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள்தமக்கான ஆளணிக்கு ஒதுக்கப்படும் பணத்தை தமது குடும்பத்தினர் உறவினர்களின் பெயர்களில் தாமே எடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்னர் இதைக் காட்டமாக விமர்சித்தவர் அருச்சுனா. இப்போது அவர் மீதே அந்த விமர்சனங்கள் வந்திருக்கின்றன.

தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான ஆய்வு அலுவலராக தனது அண்ணன் மகனை நியமித்து அவருக்கான கொடுப்பனவுகளையும் அருச்சுனாவே எடுத்துக்கொள்கிறார் என்கிற காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் 'வைரலாக' பரவியதைத் தொடர்ந்து இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஊழலுக்கு, எதிராக தன்னை முன்னிலைப்படுத்தும் அருச்சுனா இராமநாதன், அண்ணன்மகனைவேலைக்கு அமர்த்தி, அவரின் சம்பளத்தையும் தானே பெற்றுக்கொள்வது சரியா என்று சமூக ஊடகப் போராளிகள் இப்போது கேள்வி எழுப்பி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தனது செலவு விவரங்களைப் பட்டியலிடுகையில், தனக்கான சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் என்பன தனது செலவீனங்களுக்குப் போதுமானதாக இல்லை இதனால் தனக்கு கீழ் நியமிக்க வழங்கப்பட்டுள்ள நாடாளுமன்ற சலுகையில், ஆய்வு அலுவலராக தனது அண்ணன் மகன் ராமநாதன் அறிவன்பன் என்பவரை நியமித்து, அவருக்கு நாடாளுமன்றத்தினால் கொடுப்பனவாக வழங்கப்படும் 56,000 ரூபாவை பணத்தை முழுமையாக அவரிடம் இருந்து பெற்றே தனது செலவீனங்களை ஈடுசெய்கிறார் என்று தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை தனது மகனின் பாடசாலைக் கல்விச் செலவு, கொழும்பில் உள்ள வீட்டின் வாடகை செலவு என்பன உட்பட தனது ஆடைகளுக்காகவே 70 ஆயிரத்திற்கு மேல் மாதாந்தம் செலவிடுகிறார் என்றும் அதனால்தான் தனக்கு கீழ் நியமிக்கப்பட கூடிய ஆளணியில் அண்ணாவின் மகனை நியமித்து அந்தச் சம்பளத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்கிறார் என்றும் அப்படியிருந்தும் தனது வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்யமுடியாது திண்டாடி வருகிறார் என்றும் கூறியிருக்கிறார்.

இது தொடர்பில் பலரும் கோபத்துடன் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

.................................

'சண்டேலீடர்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவரான லசந்த விக்ரமதுங்கவைக் கொலை செய்த வழக்கில் மூன்று சந்தேகநபர்களை விடுவிக்க சட்ட மா அதிபர் எடுத்த முடிவு பெரும் சர்ச்சையாக மாறியிருக்கின்றது. இந்தக் கொலை வழக்கில் சாட்சிகளைக் குலைக்க முயன்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூவரையே விடுவிக்க சட்ட மா அதிபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பரிந்துரை செய்திருந்தார் என்று சொல்லப்படுகின்றது.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக வெடித்ததை அடுத்து செய்யும் முடிவு குறித்த காரணங்களை அறிய, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்கவை நேற்று பிற்பகல் அழைத்துப் பேசியுள்ளார்.

சட்டமா அதிபர் பிற்பகல் 1.45 மணியளவில் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றிருந்ததோடு, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவும் இதன்போது இணைந்துக்கொண்டார். எனினும் சந்திப்புநிறைவடையும்வரையில் நீதிஅமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வாய்திறக்கவே இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் நாடாளுமன்றத்திலும் அவர் மௌனம் கலைக்கவில்லை.

சுமார் 2 மணி நேரம் நீடித்த கலந்துரையாடலுக்குப் பிறகு, சட்டமா அதிபரும் நீதி அமைச்சரும் மாலை 4 மணியளவில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியேறினர்.

..........................

யாழ்ப்பாணம் , திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனை சூழவுள்ள 14 ஏக்கர் காணியும் விகாரைக்கு சொந்தமானது எனவும், அதனை யாருக்கும் கையளிக்க முடியாது என அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் யாழ் . மாவட்ட செயலருக்கு கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

2024 டிசெம்பர் 13 நடைபெற்ற யாழ் , மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், திஸ்ஸ விகாரை விவகாரம் ஆராயப்பட்டது. இறுதியில் விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளைப் பொது மக்களிடம் கையளிக்க இணைக்கப்பாடு எட்டப்பட்டது. இந்த விடயத்தைக் குறிப்பிட்டே பௌத்த மகா சம்மேளனம் கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கூட்டத்திற்கு, விகாரைக்கு பொறுப்பான விகாராதிபதியையோ விகாரை நிர்வாகத்தினரையோ அழைத்திருக்கவில்லை எனவே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இணைக்கப்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது.

"விகாரை அமைக்கப்பட்டுள்ள 07 ஏக்கர் காணி, அதனை சூழவுள்ள காணி என 14 ஏக்கர் காணியையும் விகாரைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக விகாரைக்கு சொந்தமான காணிகளை பொது மக்களுக்கு வழங்க முடியாது.

விகாரைக்கு உரிய காணியில் , பௌத்த சமய முன்னேற்றத்திற்கான சைத்யம் , புத்த மெதுரா , போதி, அன்னதான மடம், மடாலயம் , ஓய்வு மண்டப வசதிகள் , தியான மண்டபங்கள் , பூங்கா போன்றவை அமைக்கப்பட வேண்டும் அதற்கு உரிய நடவடிக்கைகளை விரைந்துஎடுக்கவேண்டும்" என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசிடமிருந்து ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முழுமையானபட்டியலைகீழேகாணலாம்

கபில நுவன் அத்துகோரள - ரூ. 504,000
விமலவீர திசாநாயக்க - ரூ. 550,000
கீதா குமாரசிங்க - ரூ. 972,000
ஜனக திஸ்ஸகுட்டிஆராச்சி - ரூ. 1,143,000
குணபால ரத்னசேகர - ரூ. 1,412,780
பிரேம்நாத் சி. தொலவத்த - 23 இலட்சம் ரூபா
பிரியங்கர ஜயரத்ன - ரூ. 2,348,000
சம்பத் அத்துகோரள - ரூ. 2,540,610
ஜயந்த கெடகொட - ரூ. 2,814,800
விமல் வீரவன்ச - ரூ. 2,954,000
பேராசிரியர்சன்னஜயசுமன-ரூ. 3,334,000
அகில எல்லாவல - ரூ. 3,554,250
சமல் ராஜபக்ஷ - ரூ. 6,539,374
சந்திம வீரக்கொடி - ரூ. 6,948,800
அஷோக பிரியந்த - ரூ. 7,295,000
சமன் பிரிய ஹேரத் - 105.2 இலட்சம் ரூபா
ஜனக பண்டார தென்னகோன் - 105.5 இலட்சம் ரூபா
ரோஹித அபேகுணவர்தன - 116.4 இலட்சம் ரூபா
விசேட வைத்தியர் கீதா அம்பேபொல - 137.8 இலட்சம் ரூபா
சஹன் பிரதீப் - 171.3 இலட்சம் ரூபா
செஹான் சேமசிங்க - 185.1 இலட்சம் ரூபா
இந்திக்க அநுருத்த - 195.5 இலட்சம் ரூபா
மிலான் ஜயதிலக - 223 இலட்சம் ரூபா
வைத்தியர் ரமேஷ் பத்திரன - 281 இலட்சம் ரூபா
துமிந்த திசாநாயக்க - 288 இலட்சம் ரூபா
கனக ஹேரத் - 292 இலட்சம் ரூபா
டீ.பி.ஹேரத் - 321 இலட்சம் ரூபா
பிரசன்ன ரணவீர - 327 இலட்சம் ரூபா
டபிள்யு டீ.வீரசிங்க - 372 இலட்சம் ரூபா
ஷாந்த பண்டார - 391 இலட்சம் ரூபா
எஸ்.எம்.சந்திரசேன - 438 இலட்சம் ரூபா
சனத் நிஷாந்த - 427 இலட்சம் ரூபா
சிரிபால கம்லத் - 509 இலட்சம் ரூபா
அருந்திக்க பெர்னாண்டோ - 552 இலட்சம் ரூபா
சுமித் உடுக்கும்புர - 559 இலட்சம் ரூபா
பிரசன்ன ரணதுங்க - 561 இலட்சம் ரூபா
கோகிலா குணவர்தன - 587 இலட்சம் ரூபா
மொஹான் பீ டி சில்வா - 601 இலட்சம் ரூபா
நிமல் லன்சா - 692 இலட்சம் ரூபா
அலி சப்ரி ரஹீம் - 709 இலட்சம் ரூபா
காமினி லொக்குகே - 749 இலட்சம் ரூபா
ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ - 934 இலட்சம் ரூபா
கெஹெலிய ரம்புக்வெல்ல - 959 இலட்சம்

## அரிசியின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஓரிரு மாதங்களில் சந்தையில் திட்டமிட்ட வகையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டது. இதனை கட்டுப்படுத்துவதற்காகவே அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நுகர்வோர் அதிகார சபை விதித்தது.

விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ பச்சை அரிசியின் சில்லறை விலை ரூ. 210 , நாட்டு அரிசியின் விலை ரூ. 220, சம்பா அரிசியின் விலை ரூ. 230 என்ற அடிப்படையில் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது. அதேபோன்று தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் 1 கிலோ பச்சை அரிசியின் விலை ரூ. 220, நாட்டு அரிசியின் விலை ரூ. 230, சம்பா அரிசியின் விலை ரூ. 240, கீரி சம்பாவின் விலை ரூ. 260 என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல்லுக்கான உத்தரவாத விலை ரூ. 120 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு சொந்தமான நெல் ஆலைகள் தற்போது இராணுவத்தின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப்படுகின்றன. பெரும்போக விவசாயத்தில் அதிகளவான நெல்லை கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் காலங்களில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாது' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈஸ்டர்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் புதனன்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

மிலேச்சத்தனமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வு பிரிவின் அப்போதைய பணிப்பாளர் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டதோடு, அவரைப் போன்ற பல விசாரணை அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இதனால் அந்த விசாரணைகளுக்கு பெரும் தடைகளும் இடையூறுகளும் ஏற்படுத்தப்பட்டன.

அதன் பின்னர் அந்த விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுமில்லை. எனினும் அண்மையில் குற்றப்புலனாய்வுப் பிரிவு மீண்டும் அந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த சில காரணிகள், சில தெளிவற்ற காரணிகள் தொடர்பில் மீண்டும் விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டியிருந்தது. காலவரையறை காரணமாக சில காரணிகள் குறித்த ஆழமாக விசாரணைகளை முன்னெடுக்க முடியாமல் போனதாக அந்த அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு புதிய விடயங்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. அவற்றில் ஒன்று சனல் 4 செய்தி சேவையின் ஆவணக் காணொளியில் வெளிப்படுத்தப்பட்ட காரணிகளாகும். முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் பெரும் சதித்திட்டம் காணப்படுகிறது.' எனக் குறிப்பிட்டிருந்தமையும் மீளவிசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய ஒரு காரணியாகும்.

இந்த விசாரணைகள் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் முன்னெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மாத்திரமின்றி நாட்டில் இடம்பெற்றுள்ள கொலை சம்பவங்கள் குறித்த விசாரணைகளிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல் தலையீடுகள் காணப்பட்டன. எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் எந்தவகையிலும் அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

செனல் 4 செய்தி சேவையில் பல்வேறு காரணிகளை வெளிப்படுத்திய அசாத் மௌலானா தொடர்பில் தற்போது பல்வேறு விடயங்கள் கூறப்படுகின்றன. அவரை நாட்டுக்கு அழைத்துவரவுள்ளதாகவும் கூறப்படுகிறது. உண்மையில் இது அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய காரணியல்ல. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் எதற்காக யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கையாகும். எனவே அதற்கான விசாரணைகள் நிச்சயம் முன்னெடுக்கப்படவேண்டும். அந்த பொறுப்பு குற்றப்புலனாய்வு பிரிவினருக்குரியது என்பதால், அதனை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு விசாரணைகளிலும் அரசியல்வாதிகளின் தலையீடு தேவையற்றது. அதேபோன்று அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து விசாரணைகளைக் கைவிட்டு விட வேண்டாம் என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்திடமும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## பலாலி ...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓடுபாதையை விரிவுபடுத்துவதற்காக பலாலியில் மேலும் நிலத்தை ஆளும்தரப்பு அபகரிக்கப் போவதாக பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக உள்ளது.

தற்போது பலாலி ஓடுபாதை 1,300 மீற்றராகவும் கட்டுநாயக்க விமானநிலையத்தில் 3,400 மீற்றராகவும் ரத்மலானை விமான ஓடுபாதை 1700 மீற்றராகவும் உள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள உள்ள பலாலி விமான நிலையத்திற்கான விமான ஓடுபாதையை மேலும் 2,400 மீற்றர் வரை நீடிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது இரத்மலானை விமான ஓடுபாதையின் அளவைவிட அதிகமானதாகும்.

ஆளும்தரப்பு மேலும் காணிகளை அபகரிக்கும் நோக்கில் செயற்படுவதால் பலாலி பிரதேசத்தில் மீள்குடியேற்றுவதற்காக காத்திருக்கும் பலாலி மக்கள் பெரும் கொந்தளிப்பில் உள்ளனர்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்று அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்று கூறியிருந்தாலும், உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் பலாலி பகுதிக்குள் விமான ஓடுபாதை நீடிப்புக்காக மேலும் காணிகளை அபகரிக்க இந்த ஆளும்தரப்புச் சிந்திக்கின்றது.

இந்த விடயங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் கலந்துரையாடப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி கருத்துக்களைக் கேட்டறியவேண்டும். எங்களுக்கும் கருத்துகள் உள்ளன.

நீங்கள் உண்மையில் மிகவும் திறமையான சர்வதேச விமான நிலையத்தை உருவாக்கப் போகிறீர்கள் என்றால் அதற்கு யாழ்ப்பாணம் பொருத்தமற்ற இடமாகும். அது ஒரு மூலையில் உள்ளது. வன்னியில் எங்காவது கட்டலாம். வவுனியாவில் அல்லது அனுராதபுரத்தில் அமைக்கலாம், கிழக்கில் அமைக்கலாம். மத்திய பகுதியொன்றில் அமைக்கவேண்டும். ஏதோ ஒரு மூலையில் அமைக்கத் தேவையில்லை.

எனவே இவை விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். மேலும், பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, ஆளும்தரப்பு ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றேன் என்றார்.

## மகிந்தவின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனு பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மஹிந்த ராஜபக்ச சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடுகளும் இன்றி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரிகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடுகளை பரிசீலித்த பின்னரே மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரிகளை குறைப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்தில் கொண்ட நீதியரசர்கள் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# சாய்ந்தமருதில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி சிறுவர் கழக ஒன்றுகூடல்




(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட சமுர்த்தி சிறுவர் கழகங்களின் மாபெரும் ஒன்று கூடலும் தேசிய சுதந்திர தின நிகழ்வும் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது பௌசி கடற்கரை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், அம்பாறை மாவட்ட சமுர்த்திக்காரியாலயம்மற்றும்சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அசார், கௌரவ அதிதிகளாக சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவாபிக்கா, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களான பி.எம்.ரஞ்சனி, எச்.எல்.ஜெயரத்ன, சாய்ந்தமருது, நிந்தவூர் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர்களான ஏ.சீ.ஏ. நஜீம், ஏ.சீ. அன்வர் உள்ளிட்ட சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களிலிருந்து 400 இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் சிறுவர்களின் பங்குபற்றலுடன் கலை, கலாசார, பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



எதிர்கால சந்ததியினர்களுக்கிடையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே நிகழ்வின் நோக்கமாகும்.

## 35 வருட ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார் சித்தீக் ஆசிரியர்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/அல்-அஸ்ஹர் வித்தியாலய கணித பாட ஆசிரியராக கடமையாற்றி வந்த எம்.ஏ.எம். சித்தீக் தனது 35 வருட அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அவரது சேவையை பாராட்டி கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வும், 2025 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களுக்கான வித்தியாரம்ப விழாவும் பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

கடந்த 31.01.2025 முதல் ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.ஏ.எம். சித்தீக் கல்முனை கமுஃகமுஃஅல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக மட்டுமின்றி பாடசாலையின் கற்பித்தல் செயற்பாட்டோடு மாத்திரமின்றி ஏனைய இணைப்பாடவிதான, நிர்வாக பணிகளிலும் தானாக முன்வந்து தசாப்தம் தாண்டிய பணி செய்தவர்.

கமு/கமு/அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து தொடர்ந்து கமுஃகமுஃ அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்திலும் கடமையாற்றி இறுதியாக கமுஃகமுஃஅல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

கணித பாட ஆசிரியராக ஓய்வு வயது வரையும் சேவையாற்றிய இவர் கல்வி அதிகாரிகளினதும், பாடசாலை சமூகத்தினதும், ஊர்மக்களினதும் நன்மதிப்பை வென்றதுடன் இளமையும், துடிப்போடும் சேவையாற்றிக் கொண்டிருந்தார் என்பதுடன் மிக அனுபவம் வாய்ந்த கணினி தட்டச்சுவியலாளராகவும், தகப்பனை இழந்த வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களிற்கு உதவித் தொகை வழங்கும் பணியில் இரு தசாப்தம் கடந்து சேவை செய்து வருபவர். மேலும் சமூக சேவையிலும், மார்க்க விடயங்களிலும் அதீத ஈடுபாடு கொண்டவராக திகழ்கிறார்.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களுக்கான வித்தியாரம்ப விழா நிகழ்வில் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர் எம்.ஏ.எம். சித்தீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் இவருக்கான பிரியாவிடை நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.எச். அலி அக்பர், உதவி அதிபர்களான எம்.எஸ்.றிஸானா, ஏ.பி.என். ஜெஸீல், எம்.எச்.ஐ.இஸ்ஸத், எம்.எச்.எம். ஜிப்ரி, ஏ.எம். பரீட் உட்பட ஆசிரியர்கள் பாடசாலை நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## அதிபரின் சேவையினை பாராட்டிக் கௌரவிப்பு

(றிபாஸ்)

நாவிதன்வெளி அல். ஹிக்மா வித்தியாலய அதிபர் எம். ரீ.அப்துல் சத்தாரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் வைக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையின் மேம்பாட்டு இணைப்பாளர் ஏ.எம்.சவாகிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சீ. எம்.ஹலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அதிபருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் என்பன வழங்கி கௌரவித்தார்.



## சுகாதார நிறுவன் செயல்திறனை மேம்படுத்த விசேட செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் தொடர்பான செயலமர்வு பிராந்திய பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிரின் ஒருங்கிணைப்பில் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.



இச் செயலமர்வில் ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவு தலைவர்கள், பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

காலதாமதங்களைக் கண்டறிதல், செயல்திறனை மேம்படுத்துதல், விரயத்தை குறைத்தல், முறையான மேற்பார்வையை உறுதி செய்தல், எதிர்காலத் திட்டமிடல் நடவடிக்கைகளின் நிர்வாகத்தை மேம்படுத்துதல் போன்ற பொதுப் பிரச்சினைகளைப் பற்றி இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் சில வைத்தியசாலைகளுக்கு அலுவலக இலத்திரனியல் உபகரணங்களும் பிராந்திய பணிப்பாளரினால் வழங்கிவைக்கப்பட்டன.

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சீர்தூக்கி ஆராயப்படவேண்டிய கருத்து

**ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து ஹசன் அலி விலகியுள்ளார். இதற்கான காரணங்களை முன்வைத்து அவர் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்கள் கூர்ந்து நோக்கத்தக்கவை.**

**”சிறுபான்மை மக்களின் நலன்கள் சார்ந்த பிரதிநிதித்துவ கட்சி அரசியலில் ஏற்பட்ட விரக்தியின் விளிம்பில் செயலாளர் நாயகம் பதவியை துறந்துள்ளேன்.**

**சிறுபான்மை மக்களின் தேசியத்தை பெருந்தேசிய கட்சிகள் ஏற்றுக் கொள்வதாக இல்லை. முஸ்லிம்களின் தேசியம் பற்றி முஸ்லிம் கட்சிகள் பேசுவதாக இல்லை என்பது வேறு விடயம். ஆனால் தமிழ் மக்களின் தேசியத்தை பற்றித் தமிழ் கட்சிகள் பேசிக்கொண்டே இருக்கின்றன. ஆனால் பெருந்தேசியக் கட்சிகள் அவற்றைக் கண்டு கொள்வதாகவோ, கருத்தில் எடுப்பதாகவோ இல்லை.**

**சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எந்த பெருந்தேசிய கட்சியும் தருவதாக இல்லை. ஆளும் தேசிய மக்கள் சக்திகூட இப்பொழுது இன்னொரு முகத்தையே காட்டி கொண்டிருக்கின்றது. தேர்தலுக்கு முன்னர் வேறொரு முகத்தை காட்டியவர்கள் இப்பொழுது இனப் பிரச்சினை தீர்வுக்கான முன்னெடுப்புகளில் அலட்சியம் காட்டுகின்றனர் என்றே தோன்றுகிறது.**

**அரசமைப்பு மாற்றத்துக்கான முன்னெடுப்புகளில் பின்னடித்துக் கொண்டிருக்கின்றனர் என்று விளங்குகின்றது. அரச கரும மொழிகள் தொடர்பான கொள்கையை அமுலாக்கம் செய்வதில்கூட அக்கறை இல்லாமல் நடந்து கொள்கின்றனர் என்பது எனது அவதானம் ஆகும்.**

**ஆளும்தரப்பில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்களின் கருத்துக்கள் நான் மேற்சொன்ன விடயங்களுக்கு சான்று சொல்வனவாக உள்ளன. எனவே சிறுபான்மை மக்கள் நலன் சார்ந்த பிரதிநிதித்துவ கட்சி அரசியலை தொடர்வதால் எந்த பயனும் கிட்டப் போவதில்லை என்கிற முடிவுக்கு நான் வந்து விட்டேன்.**

**மாறாக அழுத்தக் குழுவாகச் செயற்படுவதன் மூலம் சிறுபான்மை மக்களின் நலன்கள், உரிமைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை குறைந்தபட்சம் உயிர் வாழ வைக்க முடியும் என நம்புகிறேன்’’ என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.**

**ஹசன் அலி பழுத்த அனுபவசாலி, நீண்ட காலம் அரசியலில் இருந்தவர். பல ஆட்சியாளர்களையும் ஆளும்தரப்புக்களையும் பார்த்தவர். பல சமயங்களில் அவர்களோடு சேர்ந்து பணியாற்றியுமிருக்கிறார். அனுபவ முதிர்ச்சியின் வாயிலாக அவர், இந்தப் பிரதிநிதித்துவ அரசியலின் வழியாக தமிழ், முஸ்லிம் மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாக்க முடியாது என்கிறார். அதைவிட அழுத்தக் குழுவாகச் செயற்படும் என்பது அதிகம் பயன்தரத்தக்கது என்பது அவரது கருத்தாக இருக்கின்றது.**

**தேர்தல் அரசியலை முன்னிலைப்படுத்தி அது மட்டுமே தமது அரசியல் என்றும் தேர்தல் மேடைகளில் அரசியல் பேசுவதும் நாடாளுமன்றில் உரையாற்றுவதும் மட்டுமே தமது அரசியல் என்றும் பழக்கப்படுத்திக்கொண்டுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் தேசியம் பேசும் கட்சிகள் சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்கவேண்டிய கருத்து அது. பிரதிநிதித்துவ அரசியலின் போதாமைகளை இட்டு நிரப்புவதற்கான மாற்றுவழிகளை கண்டறியாமல் விட்டால் இரு இனங்களுமே கடும் பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.**

# யாருக்காக அரசியல்?

என்.சத்திய மூர்த்தி

நாட்டின் பிற பகுதிகளைப் போலவே, வட மாகாண மக்களின் அன்றாட வாழ்விலும் போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளைய தலைமுறையினர் குறித்த செய்திகள் அன்றாடம் வந்த வண்ணம் உள்ளன. கடந்த வருடம், ஒரு காலகட்டத்தில், யாழ்பாண பத்திரிகைகளில், போதை பழக்கத்திற்கு அடிமையாகும் இளைய தலைமுறையினர், அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள் மற்றும் மையங்கள் குறித்த செய்திகளே அதிக அளவில் வெளிவந்தன. இனப்பிரச்சினை குறித்த கருத்துக்களை வாசகர்கள் யாரும் ’மிஸ்’ செய்ததாகத் தெரியவில்லை.

தற்போதும் இந்த நிலையே தொடருகிறது. அண்மையில், பொது நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட வட மாகாண ஆளுநர் வேதநாயகன் கருத்துத் தெரிவித்துள்ளார். அவரது கூற்றுப்படி, ஆண்களின் அளவிற்குப் பெண்களும் அதிக எண்ணிக்கையில் போதைபொருள்பாவனைக்கு அடிமையாகி உள்ளனர். இன்னும் சொல்லப்போனால், ஒரு கொழும்புச் செய்தியின்படி, நாட்டில் ஆண்களைவிடப் பெண்களே போதைபொருள்களுக்கு அதிகமா அடிமையாகி உள்ளனர்.

ஆளுநர் வேதநாயகன், புதிதாக இரண்டு மறுவாழ்வு இல்லங்களுக்கான தேவை உள்ளதாக அதிகாரிகள் தம்மிடம் கூறியிருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். அதாவது, ஆண்- பெண் என்ற இரு பாலாருக்கும் தனித்தனியாக மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட வேண்டிய அவசியம் தோன்றி உள்ளது.

கடந்த ஆண்டு, மறுவாழ்வு இல்லங்கள் குறித்து செய்தி வெளியிட்ட யாழ். பத்திரிகைகள், அப்போது செயல்பாட்டில் இருந்த ஒரு மறுவாழ்வு இல்லத்திற்கும் மேலாக மற்றொன்றின் அவசியம் இருப்பதாகவும் அரசு அதிகாரிகளை மேற்கோளிட்டு காட்டி செய்தி வெளியிட்டிருந்தன. அந்த தேவை தற்போதுவரை நிவர்த்தி செய்யப்பட்டதா, என்று தெரியவில்லை.

அது எவ்வாறாயினும், இனப்போர் முடிந்த காலகட்டத்தில், தமிழர் பகுதிகளில் ‘மறுவாழ்வு இல்லங்கள்’ என்ற கூற்று, போரில் அனாதையாக்கப்பட்டோருக்காக மட்டுமே கருதப்பட்டது. தற்போது, அது குறித்து யாரும் பேசுவதில்லை. மாறாக, சீரழியும் (இளைஞர்?) சமுதாயத்தை, சரியான பாதைக்கு திருத்தும் விடயங்கள் குறித்து மட்டுமே, அரசும் சமூக ஆர்வலர்களும் பேசி வருகிறார்கள். இதிலிருந்து, தமிழ் சமூகம் கடந்த பதினைந்து ஆண்டுகளில் எத்தரை தூரம் பயணித்திருக்கிறது என்பது புரிகிறது. புரிய வேண்டியவர்களுக்குப் புரியவேண்டும்.

இது போதாது என்று, அண்மைக் காலத்தில், தமிழர் வாழ்வியலோடு பிணைந்ததாக தம்பட்டம் அடித்துக் கொள்ளப்படும் யாழ்பாண பல்கலைக்கழக கலைபீட பீடாதிபதி பதவியில் இருந்து விலகியபோது பேராசிரியர் ரகுராம் ஒரு அறைகூவலை விடுத்தார். அதாவது, தமிழர் பகுதிகளில் போதைக்கு எதிரான மிகப்பெரிய திட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் என்று அவர் பொது வெளியில் கோரிக்கை விடுத்தார்.

கலைப்பீடாதிபதியின் பதவி விலகல் பிரச்சினையை விவாதித்த யாழ். பல்கலை ஆசிரியர்கள் சங்கமும், அவர் கூ-றிய மாணவர்கள் இடையேயான போதைப் பொருள் பழக்கத்தை மையப்படுத்தியே தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர். அதாவது, தமிழ் இளைஞர்களையும் அவர்களது எதிர்காலத்தையும் வழிநடத்திய பல்கலைக் கழகத்தின் இன்றைய நிலையை அவர்கள் துகில் உரித்து காட்டியிருந்தார்கள்.

ஆனால், பாழாய்போன தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள்? கலைப்பீடாதிபதியின் பதவி விலகலையும் இன அரசியலின் ஒரு பகுதியாக மட்டுமே பார்த்தார்கள். அவர்கள் கூறுவதுபோல், இள வயதில் பீடாதிபதி பொறுப்பில் இருந்த பேராசிரியர் ரகுராம், எங்கே துணை வேந்தராக நியமிக்கப்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடுமோ என்ற காரணத்திற்காகவே கட்டயாப்படுத்தி பதவி விலகச் செய்யப்பட்டார் என்பதில் உண்மை இருக்கலாம். ஆனால், அவர் குறிப்பிட்ட மாணவர்களிடையேயான போதை பழக்கம் அதன் காரணமாக ஒழுக்கமின்மை, அதன் காரணமாக பாழ்போகும் தமிழர்களின் எதிர்காலம் குறித்து எல்லாம் இந்தத் தலைமைகள் ஒரு வார்த்தை பேசவில்லை.

தற்போது, கலைப்பீடாதிபதி குறித்த பிரச்சினை முடிவிற்கு வந்து, அவர் தனது பதவி விலகல் கடிதத்ததை பின்வாங்கி, மீண்டும் பீடாதிபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். தொடர்ந்து, பேராசிரியர் ரகுராமும் சரி. அவருடன் போராடிய பிற ஆசிரியர்களும் சரி, பல்கலை கழக நிர்வாகமும் சரி, அவரது முந்தைய முன்னெடுப்புகளை தொடர்ந்து செயல்படுத்துவார்களா? இன்னும் சொல்லப்போனால், அந்த மாணவர்களை தண்டிப்பதோடு மட்டும் நிற்காமல், அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் முயற்சியிலும் இறங்குவார்களா?

இன்னும் சொல்லப்போனால், அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட தலைமைகள், எங்கே போர் முடிவுற்ற காலம் தொடங்கி, யாழ். மாணவர்கள் இன அரசியலை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு விடுவார்களோ என்று விசனப்பட்ட காலம் உண்டு. அவர்களைத் தங்களது கருவிகளாகப் பயன்படுத்திய காலமும் உண்டு. ஆனால், அன்று போல் இன்று அரசியல் மற்றும் சமூக ஆளுமைகள் இல்லாததால், அந்த மாணவர்கள் வழி தவறி பயணிக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

### கண்ணிருந்தும் குருடர்கள்

இந்தப் பின்னணியில், எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலை ஒட்டி, மீண்டும் இன அரசியலை முன்னிறுத்தி பேச்சுக்கள் நடத்திவரும் தமிழ் தலைமைகளுக்கு, தங்களது மக்களின் இன்றைய பிரச்சினை இன்னமும் கண்களுக்கு தெரியாதது ஆச்சரியம் இல்லை. அல்லது கண் இருந்தும் குருடர்கள். ஆனால், மக்கள் பிரச்சினையே தேவையான அரசியல் என்பதை அவர்கள் நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளில் இருந்தும் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கும்போது, வேதனை மட்டுமே மிஞ்சுகிறது.

ஒன்று, தமிழ் அரசியல் தலைமைகள் இன்னமும் மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை. அல்லது சிந்திக்க விரும்பவில்லை. இல்லையென்றால், மக்களின் மிக முக்கியமான அன்றாடத் தேவைகளான அரிசி மற்றும் தேங்காய் விலை உயர்வு குறித்து அவர்கள் யாருமே வாய்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# யாருக்காக...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

திறக்காதது, இவர்கள் இந்த உலகில் தான் இருக்கிறார்களா, என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

இன்னும் சொல்லப்போனால், தென்னிலங்கையில், ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையிலான அரசு, இந்த இரு பிரச்சினைகளையும் கையாளுவதைத் தவிர்க்கும் விதமாக, நாடு தழுவிய உள்ளாட்சித் தேர்தல்களை ஏப்ரல் மாததத்தின் இடைபகுதியில் கொண்டாடப்படும் சிங்கள - தமிழ் புத்தாண்டுகளுக்கு முன்னரே நடத்தி முடித்து விடவேண்டும் என்பதில் மும்மரமாக இருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறின.

இதே காரணத்திற்காக, தமிழ் - -சிங்கள புத்தாண்டு தினங்களுக்கு பின்னர் உள்ளாட்சி தேர்தலை நடத்தினால், அரசால் தவிர்க்க முடியாத அரிசி-தேங்காய் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு காரணமாக தென்னிலங்கை மக்களேகூட ஆளும் மக்கள் விடுதலை முன்னணி தலையிலான தேசிய மக்கள் சக்தி அணியின் ஆட்சியை எதிர்த்து வாக்களிப்பார்கள் என்ற எண்ணம் நிலவுகிறது. இதனை ஒட்டியே தென்னிலங்கை எதிர்கட்சிகள் தங்களது தேர்தல் உத்திகளை வகுப்பார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இங்கே நடப்பது என்ன?

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் தரப்பிடம் முதலிடத்தை இழந்துவிட்ட யாழ்பாணம் சார்ந்த தமிழ் தலைமைகள், இன்னமும் மக்களின் அன்றாட பிரச்சினைகள் குறித்து பிரஸ்தாபிப்பது இல்லை. மாறாக, இன்னமும் இனப்பிரச்சினை மட்டுமே படி அளக்கும் என்ற எண்ணவோட்டத்திலேயே அரசியல் செய்ய முயல்கிறார்கள்.

அதேசமயம், ஆளும் தரப்பின் சார்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெகதீஸ்வரன், அரிசி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்திற்கு கடந்த கால ஆட்சித்தரப்புக்கள்தான் காரணம் என்று கூசாமல் சொன்னார். அவரது கூற்றில் உண்மை இருந்தாலும், ஜனாதிபதி அநுர ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் கடந்த பின்னரும் இது போன்ற காரணங்களை மக்கள் நம்பினாலும், ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தங்களைப் பின்னுக்கு தள்ளிய ஆளும் தரப்பிற்கு எதிராக அதனைப் பரப்புரைப் பொருளாக்க வடக்கில் உள்ள தமிழ் தலைமைகளுக்குத் தோன்றாதது, மக்களுடன் அவர்களுக்கான இடைவெளியையே குறிக்கின்றது. அவர்களை பொறுத்தவரையில் இன பிரச்சினையை உயிரோட்டத்துடன் வைத்திருந்தாலே போதும், அடுத்தடுத்த தலைமுறை தமிழ் வாக்காளர்களும் தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்ற எண்ணவோட்டத்திலேயே இருக்கிறார்கள்.

### அநுரவின் கேள்வி

அண்மையில், யாழ்பாணப் பயணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக, தென்னிலங்கை குருநாகலவில் மக்களுடன் கலந்துரையாடும்போது. வட மாகாண தமிழ் மக்களும் தங்களுக்கு ஆதரவான நிலையை நாடாளுமன்றத் தேர்தலில் எடுத்ததைச் சிலாக்கித்துப் பேசினார். அதேசமயம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை தனது அரசு நிறைவேற்றும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பத்திரிகை செய்திகளின் டி, அவர் குறிப்பிட்டு முன்வைத்த விடயங்களில், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு இடம் பெற்றிருக்கவில்லை. மாறாக, வளர்ச்சிப் பணிகள் தமிழ் மக்களை சென்றடையவில்லை என்றே அவர் கூறினார். இனப் போர் முடிந்த காலகட்டத்தில், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசும் 'டெமாகிரஸியா, டெவலப்மெண்டா?' என்ற கேள்வியை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு ஜனநாயக அரசியல் தீர்வைவிட, சமூக-பொருளாதார வளர்ச்சியே முக்கியம் என்று சில முன்னெடுப்புகளை செய்தது.

இதுவே, இன்றைய காலகட்டத்தில், தமிழ் அரசியல்வாதிகளுக்குப் போதுமான விடயம். வெறும் வாயையே சுவைப்பவர்களுக்கு, அநுர, சிறிது அவலையும் கொடுத்துள்ளார். ஆனால், மாவை சேனாதிராசாவின் மறைவையை ஒட்டி அரசியல் செய்த தமிழ் தலைவர்களையும், அவர்களால் குறிவைக்கப்பட்டவர்களையும், உள்குத்து அரசியல் செய்தவர்களையும், தமிழ் மக்கள் அவ்வளவு சீக்கிரமாக மறந்து விடுவார்களா, என்ன?

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், தமிழ் தேசியத்தின் பால் மீண்டும் ஈர்க்கப்படுவார்களா? அல்லது, தங்களது தலைவர்கள் திருந்தவே மாட்டார்கள் என்று, ஆளும் தரப்பு தங்களது அன்றாட பிரச்சினைகளுக்கான தீர்வுகளையாவது முன்னெடுக்கமாட்டார்களா, என்ற ஆதங்கத்தோடு, உள்ளாட்சி தேர்தலில் அவர்களை ஆதரிப்பார்களா? இதுவே, வரும் கிழமைகளில் தமிழ் மக்கள் முன்னால் இருக்கும் கேள்வி, தங்களது அரசியல் தலைமைகள் முன்னர் அவர்கள் வைக்கும் கேள்வியும்கூட.

ஆனால், கடந்த 2023ம் ஆண்டு, நீதிபதி சரவணராஜா விவகாரத்தில், அனைத்து தமிழ் தலைமைகளும் ஒன்று சேர்ந்து ஒரு முறைக்கு இரு முறை சொந்தக் காசில் சூனியம் வைத்துக் கொண்ட பின்னரும், பாடம் படிக்கவில்லை.

போதாததற்கு, ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் என்று மேலும் இரண்டு பாடங்கள், மக்கள் தமிழ் தலைவர்களுக்கு வைத்த தேர்வுகள். சரவணராஜா விகாரத்தில், குறித்த நீதிபதியும் தாங்கள் சார்ந்திருந்த மக்களும் தங்களை சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் ஏமாற்றியதை கிரகித்துக்கொள்ள அவர்கள் இன்னமும் தயாரில்லை.

தொடர்ந்தும் தற்போது சுதந்திர தினத்தை 'கரி நாள்' என்று சரித்திரபூர்வமாக பிரகடனப்படுத்திவிட்டு பத்துப்பேரைகூட தங்களது ஊர்வலங்களுக்கு கூட்டமுடியாத தலைவர்கள் தங்கள் மக்களிடமிருந்து என்ன பாடம் கற்றுக் கொண்டுள்ளார்கள்? ஏன், 'கரி நாள்' ஆதரவு தலையங்கள் எழுதிய தமிழ் பத்திரிகைகள்கூட அது குறித்த ஊர்வலங்களில் மக்கள் பெரும் தொகையில் கலந்துகொண்டார்கள் என்று செய்தி வரவில்லை.

இந்தத் தலைவர்கள், தங்களை 'தெரு பிச்சைகள்' என்று சமூக வலைதளங்களில் எள்ளி நகையாடும் ஆர்வலர்கள் தமிழர்கள் இல்லை என்றோ, அவர்கள் தமிழ் தேசியத்தை கனகாலமாக எதிர்ப்பவர்கள் என்றோ இரு தரப்பினரையுமோ கொச்சைபடுத்திக் கொள்ள மாட்டார்கள் என்றாவது நம்பலாமா?



# கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14ஆவது பரிசளிப்பு விழா நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு விழா நாளை மறுதினம் (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சி. ரகுராமும் ,சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய நடன பாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

# கலிடோனியா பாடசாலையில் சிறந்த பெறுபேறுபெற்றோருக்குக் கௌரவம்

(கேதீஸ்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை கலிடோனியா தமிழ் வித்தியாலயத்தில் நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் வெட்டு புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

செரோன் நோயல் 155 புள்ளிகளையும் விசேட திறனாளி மாணவர்களான ரி.தனுசிகா 106 புள்ளிகளையும் டீ.தில்ருக்சி 86 புள்ளிகளையும் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.





அத்துடன் பரீட்சைக்கு தோற்றிய சகல மாணவர்களும் 70இற்கு மேல் புள்ளிகளை பெற்று 100 வீத சித்தியை பெற்றுள்ளனர். இவர்களை பாடசாலையின் அதிபர் இரா. மகேஸ்வரன், கற்பித்த ஆசிரியை சு.மோகனாதேவி ஏனைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் வாழ்த்துகின்றனர்.

# இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய தரம் 6 மாணவர்கள் கால்கோல் விழா

(இரவீந்திரன்)

இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்தில் இவ்வருடத்திற்கு புதிய மாணவர்களை (தரம் 06) உள் வாங்கும் நிகழ்வு 05 ஆம் திகதி புதன்கிழமை





பாடசாலை அதிபர் இருளப்பன் ரவி. தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதி சபரகமுவ மாகாண பிரதி கல்விப்பணிப்பாளர் வினோத்கண்ணன் கலந்து கொண்டுஉரையாற்றுவதனையும் விழாவில் கலந்து கொண்ட விசேட அதிதிகளையும் பெற்றோர்கள் மற்றும் தரம் 06 மாணவர்களில் சிலரையும் படங்களில் காணலாம் .










# புத்தளம் பாத்திமா கல்லூரியில் இலவச கணிதபாட கருத்தரங்கு

(சியாஜ்)

புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்கான இலவச கணிதப் பாட கருத்தரங்கு தேசத்தின் குரல் அமைப்பின் அனுசரணையில்பாடசாலையின்அதிபர்சரீனா பர்வீன் அஜ்மல் தலைமையில் நடைபெற்றது .

ஆயிரம் மாணவர்களுக்கு இலவச கணிதப் பாட கருத்தரங்கு என்னும் வேலைத்திட்டத்தின் ஊடாக தேசத்தின் குரல் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் இடம்பெற்ற நான்காவது கருத்தரங்கு இதுவாகும்.

இதில் தேசத்தின் குரல் அமைப்பின் பிரதி தலைவரும், சமூக ஆர்வலருமான என்.எம்.ஹிஜாஸ் மரைக்கார் உள்ளிட்ட அதன் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# புத்தளத்தில் இலவச கண் பரிசோதனை

(சியாஜ்)

புத்தளம் ரத்மல்யாய கிராமத்தில் பார்வைக் குறைபாட்டால் அவதியுற்றுள்ள மக்களின் நலன் கருதி தேசத்தின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாம் ஒன்று ரத்மல்யாய மருத்துவ நிலையத்தில் அமைப்பின் தலைவர் பாஸில் தலைமையில் இடம்பெற்றது.

இந்த மருந்து முகாமில் அதி நவீன உபகரணங்களின் உதவியுடன் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சலுகை அடிப்படையில் மூக்கு கண்ணாடிகள் அன்றைய தினமே வழங்கப்பட்டது. இதில் 11 கிராமங்களை சேர்ந்த மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.





உ
முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# அறிவு வழிபாட்டில் அறிவு

மனத்தை அது போகும் போக்கிற்கெல்லாம் போக விடாது அதனைத் தடுத்துத் தீமையானவற்றிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானவற்றில் அதனைச் செல்லவிடுவதே அறிவு என்பார் பேராசான் திருவள்ளுவர். இவ்வாறு மனத்தைத் தீமையானவற்றிலிருந்து நன்மையானவற்றிற்குத் திசை திருப்புவதற்கு இன்றியமையாதது சமய அறிவு. இதனாலேயே சமயநெறியில் வழிபடுதல் அல்லது வழிபாடு என்பது முதன்மை பெறுகின்றது. ‘ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லடியார் மேல், ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப்பொருள் போலும்’ என்று திருஞானசம்பந்தர் இதனைக் குறிப்பிடுவார். சிவபெருமான் அறிவின் திரண்ட வடிவாக இருக்கின்றான். அப்பேரறிவே நாளும் நன்மையானவற்றயே வேண்டி, வழிபட்டு நிற்கின்ற அடியவர்களின் மேல் உள்ள குற்றக் குவியல்களைப் போக்கி நல்வழிப் படுத்துகின்ற உண்மைப் பொருள் என்று குறிப்பிடுவார். எனவே இறைவழிபாடு என்பது இறைவனை அறிவின் திரண்ட வடிவாகக் கண்டு அவ்வறிவு நிலையை எய்துவதற்கு நாம் அவன் திருவருளை வேண்டுவது என்பதனைத் தெளிதல் வேண்டும். பேர் அறிவுப் பேர் அருளாளனாக விளங்கும் அப்பெருமானிடத்தில் உள்ள அறிவினைப் பெருவதற்கு அப்பெருமானின் பேர் இயல்புகளை அறிதலும் நம் அகப்புறக் குற்றங்களைக் களைதலும் இன்றியமையாதவை ஆகும்.

உலகஅறிவும்அறிவேஎன்றாலும்அதனைத்துணையாகக் கொண்டு மெய்ப்பொருளான இறைவனை அறியும் அறிவே மெய்யறிவு அல்லது மெய்ஞானம் எனப்படுகின்றது. பேறறிவாக இருக்கின்ற சிவப்பரம்பொருளை அறிந்து அவ்வறிவினை உணர்தலேமெய்யுணர்வுஎனப்படுகின்றது. இறைஅறிவினைப் பெறுவதற்கும் மேலான ஓர் அறநெறி அல்லது அறிவுநெறி உலகத்தில் இல்லை. அப்படி இருப்பதாக ஏதாவது ஒரு சமயமோ அல்லது கொள்கையோ இருக்குமானால் அது நல்ல சமயமோ அல்லது கொள்கையோ ஆகாது. இறைஅறிவை விட்டு விலகிய எந்தக் கொள்கையும் சமயமும் உயிருக்கு உண்மையான மெய் அறிவையும் அதனால் விளையும் மெய் உணர்வையும் கொடுக்காது என்பதனை, ‘ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை, ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று, ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம், ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே’ என்கின்றார் திருமூலர்.

உயிர் சிவஅறிவு பெறுவதற்குச் செய்யப்படுகின்ற செயற்பாடுகளை வழிபாட்டுச் செயல்முறைகள் அல்லது சமயநெறி என்கின்றோம். சமயநெறி என்பது பொதுவான நற்பண்புகளையும் குறிப்பாகச் சமய வழக்கில் நன்னெறி நான்கு எனப்படும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பவற்றையும் குறிக்கும். இவற்றின் வழி இறைஅறிவைப் பெற முயலுவதனையே வழிபடுதல் என்பர். இறைவழிபாட்டில் இயற்றப்பெறும் செயல் முறைகளாகிய விளக்கேற்றுதல், மணியை ஒலித்தல், தூபதீபம் காட்டுதல், திருமுறைகள் ஓதுதல், திருநீராட்டுதல், திருவமுது அளித்தல், திருநீறு அணிதல், கணிகை மணி அணிதல், திருக்கோயில் வழிபாடு இயற்றுதல், ஆலயத் திருத்தொண்டுகள் செய்தல் இவை அனைத்துமே சிவ அறிவைப் பெற செய்யபடும் முயற்சிகளாம், தவிர, நீண்ட பூசனைகள் இயற்றுதல், அகத்தவமான சிவயோகம் எனப்படும் சிவச்செறிவினை இயற்றுதல் இவை அனைத்துமே சிவஅறிவைப் பெற்று மெய்யுணர்வினைப் பெறுதற்கான வாயில்களாம் என்பதனைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.


வழிபாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் நமக்கு சிவஅறிவு வளர்தற்குத் துணையாய் நிற்கின்றதா என்பதனை உணர்ந்து இயற்றுதல் முதன்மையானது. இவ்வாறு நம் இறைஅறிவை பெருக்கும் ஒவ்வொரு செயலின் வழியும் நம் உயிரானது இறைஅறிவினைப் பெறுவதற்குத் தயாராகிச் செவ்வியடைந்து நிற்கப், பேரறிவாளனாகியா அச்சிவப் பரம்பொருள் நமக்கு மெய்யறிவினை நல்குவான் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைஅறிவு பெறுவதற்கு வாயிலாக அமையும் இச்செயல் முறைகளையே பிடித்துக் கொண்டு அதற்கே முதன்மைக் கொடுத்து அதனால் விளையும் பயனை எண்ணாது இருப்பது ஏணியைக் கொண்டு மேலே ஏறுகின்ற ஒருவன் அவ்வேணியைப் பயன்படுத்தி மேலே சென்றுப் பெற வேண்டியதைப் பெறாமல் அவ்வேணியைப் பிடித்துக் கொண்டு மயங்கி நிற்றலைப் போன்றதாகும் என்று குறிப்பிடுவர். இன்னும் சிலர், உண்ணாது இருத்தல், உறங்காது, இருத்தல், கொல்லாமை, புலால் உண்ணாமை, ஐம்பொறி அடக்கல், பிற உயிர்கள் மீது இரக்கம் கொள்ளல், பிற உயிர்களுக்கு உதவி செய்தல் போன்ற வற்றை ஒரு வழிபாடாகவே கொள்வர். இவையும் சிவஅறிவைப் பெற முயலுகின்ற முயற்சியின் முதற்படியே ஆகும் என்கின்றார் திருமூலர். இவற்றிற்கும் மேலாக அறிவு வழிபாட்டில் பெற வேண்டிய அறிவினைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

அறிவு வழிபாட்டில் பெற வேண்டிய உண்மைச் சிவஅறிவு என்பது என்னவெனில், சிவனது பேர் அகண்டிதத்தினுள்ளே அடங்கி இருக்கின்ற இவ்வுலகமும் இவ்வுலகத்தின் உள்ளே உள்ள பிற பொருட்களும் சிவனது உடைமை. இவ்வுலகத்திலே உள்ள பொருள்களும் அப்பொருள்களைத் துணையாகக் கொண்டு வாழும் உயிர்களும் அவனுடைய உடைமைப் பொருள்கள். அச்சிவனுக்கு அடிமையாகவும் அவனுக்கு உரிமைப்பொருளாகவும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதனைஉணர்தலேஉண்மையானமெய்யறிவுஎன்கின்றார் திருமூலர். இதனை உணர்ந்து சிவனிடத்து ஏற்படும் அன்பின் மிகுதியால் என்றும் அவனை இடைவிடாது எண்ணுதலினால் கிடைக்கப் பெறுவதே அவனின் திருவருள். உலகத்தில் உள்ள உயிரற்றப் பொருள்கள் யாவும் சிவனது உடைமை, உயிருள்ள அறிவுடைய பொருள்கள் யாவும் அவனது அடிமை என்பதனை வழிபாட்டில் எவ்வகையாலும் உணர்வதே அறிவு வழிபாடு என்பதனைத், ‘தன்பால் உலகம் தனக்கரு காவதும், அன்பால் எனக்கரு ளாவது மாவன, என்பார்கள் ஞானமும் எய்தும் சிவோகமும், பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே’ என்கின்றார் திருமூலர்.

இதனால் சமய உண்மைகளை ஆராய்வோரும் சமய நெறிகளில் சிறந்தோரும் அவர்தம் ஆராய்ச்சியால், தம் முயற்சியால், ‘யான்’ என்று தன்னையே உயர்வாகவும் இறைவனாகவும் கருதுகின்ற அகமயக்கமும் அறிவுக் குற்றமும்உடையவர்மெய்யறிவு உடையவர் அல்லது மெய்ஞானி ஆகார். கிட்டுவதை எல்லாம் என்னுடையது என்று பிழையாக உணரும் புறமயக்கமும் பற்றும் நீங்கி எல்லாம் சிவனது அடிமையும் உடைமையும் என உணர்பவர்களே உண்மையான சிவஅறிவாளர்கள் என்கின்றார் திருமூலர். ‘நான் யார்’ என்று ஆராய்கின்றவன், தன்னை ‘இன்னான்’ என அறிதல் சிவஅறிவுபெறுதல் என்கின்றார் திருமூலர். தமது அறிவிற்குச் சிவனது அருளே முதலாகி நிற்கின்றதுஎன்பதனைஉணரும் உணர்வு முதன்மையானது என்கின்றார். அவ்வுணர்வால் சிவனது பேர் அறிவிற்கும் பேர் அருளுக்கும் முன்னால் அடங்கி நிற்கும் அடக்கமும், அடங்கி நிற்கின்றமையால் அச்சிவனை மறவாது எண்ணி உணர்கின்ற உணர்வால் அச்சிவனிடத்து அன்பு பெருகும் என்கின்றார். இவ்வன்பின் துணையால் அறிவிலே இறைவனை மறவாது இருக்கின்ற முறையினை உணர்ந்த சிவ அறிவாளர்களுக்கே இவ்வுலகமாகிய இருள் நீங்கிச் சிவஅறிவாகிய சிவஒளி ஒளிவிடும்என்கின்றார்திருமூலர்.

சீலம், நோன்பு, செறிவு ஆகிய நன்நெறிகள் மூன்றினால் இயற்றப் பெற்ற வழிபாடுகளை விடுத்து மெய்யறிவு நூல்களை ஓதுதல், பிறருக்கு அவற்றை ஓதுவித்தல் மெய்யறிவு செய்திகளைக் கேட்டல், பிறரைக் கேட்பித்தல், குற்றமற்ற மெய்ப்பொருளான இறைவனின் திருவருளை இடைவிடாது சிந்தித்தல் போன்றவற்றை அறிவுப் பூசனை என்று சிவஞான சித்தியார் எனும் மெய்கண்ட நூல் குறிப்பிடுகின்றது. இதனையே திருமூலரும் குறிப்பிடுகின்றார். மேற்கூறிய மெய்யுணர்வு பெறுதலுக்குக் கேட்டல், எண்ணுதல், தெளிதல், அதில் அழுந்தி நிற்றல் என்பன மெய்யுணர்வு அல்லது அறிவு வழிபாட்டிற்கு இன்றியமையாத வாயில்கள் என்கின்றார் திருமூலர். வழிபாடு என்றால் வெறும் செயல் முறைகள் மற்றும் பூசனைகள் மட்டும் என்று நின்று விடுதல் ஆகாது. அவற்றின் பின்னே புதைந்துள்ள அறிவுக்கூறுகள் எவை என்பதனை எண்ணி உணர்தலே அறிவு வழிபாட்டில் அறிவாகும். இவற்றை எண்ணி உணர்வதற்கு சில அடிப்படையான தேடல்கள் முதன்மையாகின்றன. தமிழ்ச் சைவர்களாய் இருப்பின் அத்தேடலின் விளைவாக, நமக்குரிய நெறி சித்தாந்த சைவம். நம் இறை போற்றிப் பாடல்கள் திருமுறைகள். நம் இறை உண்மை நூல்கள் பதிநான்கு மெய்கண்ட நூல்கள். நாம் பின்பற்ற வேண்டிய அருளாளர்கள் நாயன்மார்கள். நாம் ஓத வேண்டிய மூல மந்திரம் திருவைந்து எழுத்து. நாம் அணிய வேண்டியச் சின்னங்கள் திருநீறு, கணிகைமணி என்பவை. நாம் பின்பற்ற வேண்டிய நன்னெறி நான்கு சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பவை கிட்ட வேண்டும். இவ்வாறானவற்றை எண்ணிப்பார்த்தாலே அறிவு வழிபாட்டில் தலைப்பட்டு முறையான இறைவழிபாட்டில் சென்று சிவஅறிவினைப் பெறுவோம் என்பது திண்ணம். இன்பமே எந்நாளும் துன்பமில்லை!

**நன்றி: மலேசிய சைவ நற்பணிக் கழகம்**



காலைக்கதிர் Kalaikkathir

## விவசாயிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்ததாவது:

நாங்கள் நெல் கொள்வனவு செய்வதற்காக தேசிய ரீதியில் உள்ள சங்கங்களுடன் இணைந்து விலையொன்று நிர்ணயம் செய்யப்பட்டு ஆளும்தரப்புக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஏக்கருக்கு 25 மூடைகள் என்ற வகையிலேயே இந்த நெல் விலை மிகவும் குறைந்ததாக தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அதைக் கருத்தில்கொள்ளாமல்அதனைவிடகுறைவான நெல் விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பேரிடர்காரணமாகவிவசாயிகள் பெரும் நஷ்டத்தினை நாடளாவிய ரீதியில் எதிர்கொண்டுள்ளனர். ஏக்கருக்கு சிலருக்கு நான்கு ஐந்து மூடைகளும் அறுவடை கிடைத்துள்ளது. ஆனால், ஆளும்தரப்பு அவற்றினை கருத்தில் கொள்ளவில்லை. உர விலைகளை குறைக்காமல், எண்ணெயின் விலையினைகுறைக்காமல்,நெல்விலையை மட்டும் குறைத்துக் கொள்வனவு செய்ய முனைகிறது. முழு நம்பிக்கை கொண்டே இந்த ஆளும்தரப்பை நாங்கள் ஆட்சிக்குக் கொண்டுவந்தோம். விவசாயிகளை கருத்தில்கொள்ளுங்கள் என்றார்.

## கடமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணசிங்க எடுத்த நடவடிக்கை குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த தீர்மானம் தற்செயலானது அல்லவென்பது கடந்த வாரத்தில் இடம்பெற்ற விடயங்களில் தெளிவாவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு முதல் இந்த வழக்கு விசாரணைகள் தீவிரமாக அல்லது நம்பகத்தன்மையுடன் இடம்பெறவில்லை எனவும் அஹிங்சா விக்ரமதுங்க தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட மாஅதிபருக்கு எதிராக குற்றப்பி ரேரணையைமுன்வைத்துஅவரைபதவிநீக்கம் செய்வதே நீதிக்கான ஆளும்தரப்பின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஒரேவழி எனவும் அஹிம்சா விக்ரமதுங்க குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபரைப் பொறுப்புக் கூறச்செய்வதற்கு நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு நன்றி கூறுகிறேன். ஆனால் சட்டமாஅதிபரைத்தொடர்ந்து கண்காணிப்பது அரச தலைவரின் பணியல்ல.

சட்டமா அதிபர் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்.எனவேநாடாளுமன்றத்தில் அவருக்கு எதிரான குற்றப்பிரேரணையை நிறைவேற்றி, அவரைப் பதவியிலிருந்து விலக்குவதன் ஊடாகவே நீதித்துறையை சீரமைப்பதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றமுடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## 3 புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியத்தின் சேவைகளை பிரதேச செயலாளர் அலுவலகங்கள் வரையில் கொண்டுச் செல்லுதல் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களில் இலத்திரனியல் முறையில் பிறப்பு,திருமண மற்றும் இறப்பு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் வசதியை வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்குபெற்றுக்கொடுப்பதற்கான (சியனிம்)வசதியளித்தல் என்பன இன்று முதல் ஆரம்பிக்கப்படும்.

இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான ஊடக சந்திப்பில் டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்ன தலைமையில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளரும்ஜனாதிபதிநிதியசெயலாளருமான ரொஷான் கமகே,வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின்மேலதிகச்செயலாளர்பத்மநாதன், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹர்ஷ புரசிங்க, கௌபே நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி சன்ன டி சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கமைய டிஜிட்டல் சமூகத்தை நோக்கி நாட்டை கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்தை நனவாக்கி, இந்த புதிய தளத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்ன இதன்போது தெரிவித்தார்.

நிதியை அடிப்படையாக கொண்ட கொடுப்பனவுகள் ஊழல், மோசடிகள் அதிகரிக்கவும் கொடுக்கல் வாங்கல் முறையின் வினைத்திறனற்ற நிலைக்கு காரணமாகியிருப்பதாகவும்சுட்டிக்காட்டியபிரதி அமைச்சர்இந்தசவால்களுக்குமுகம்கொடுக்க அனைத்து அரச கொடுப்பனவுகளையும் டிஜிட்டல்மயமாக்கநடவடிக்கைஎடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், டிஜிட்டல் கொடுப்பனவை ஊக்குவிப்பதன் ஊடாக மக்களுக்கு மிகவும் வசதியான மற்றும் நம்பகமான சேவையை வழங்க முடியுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

1978 ஆண்டில் சேவையை ஆரம்பித்த ஜனாதிபதி நிதியம், இதுவரையில் கொழும்பு தலைமை அலுவலகத்தில் மாத்திரமே விண்ணப்பங்களை பொறுப்பேற்றதாகவும் நாளை முதல் நாடளாவிய ரீதியிலிருக்கும் 341 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் அந்த சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட பணிக்குழுவினரால்புதியதொழில்நுட்பத்தின் மூலம்அந்தபதிவுகள்மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதியின்சிரேஷ்டமேலதிகச்செயலாளர் ரொஷான் கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை மக்களுக்கு நெருக்கமாக கொண்டுச் செல்வதற்கும் அதனூடாக உரிய வகையில் கிடைக்க வேண்டியவர்களுக்கு அந்த சேவையை பெற்றுக்கொடுக்கும் இயலுமை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகும் எனவும்,வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்களுக்கு அந்தந்த நாடுகளிலிருக்கும் தூதரகங்கள் ஊடாக வினைத்திறன் மிகுந்த மற்றும் வசதியான சேவையைவழங்கும்நோக்கில்இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக தூதரகங்கள் மூலம் பிறப்பு, திருமண மற்றும் இறப்புச் சான்றிதழ்களை பெற்றுக்கொடுப்பதற்கான நுடீஆனு வசதி நாளை ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படுமென வெளிநாட்டுஅலுவல்கள்அமைச்சின்மேலதிகச் செயலாளர் பத்மநாதன் தெரிவித்தார்.

தற்போது பிறப்பு,திருமண மற்றும் இறப்புச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள காலதாமதமாகும் முறைமைக்கு பதிலாக தொழில்நுட்பத்தின் மூலம் தூதகங்களுக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் தொடர்புகொண்டுசான்றிதழ்களின்பிரதிகளை பெற்றுக்கொண்டு தூதரகங்கள் ஊடாக பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் இன்று முதல் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்குள் அனுபவம் தொடர்பான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதிகாரத்துக்கு வர முன்னர் நாமல் கருணாரத்ன போன்றோர் வயல்களில்இறங்கிமுதலைக்கண்ணீர்வடித்து போராட்டங்களை முன்னெடுத்தமையை தற்போது விவசாயிகள் அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றனர். தேர்தலுக்கு முன்னர் நெல் கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவு 160 ரூபா எனக் கூறியவர்கள் இன்று அதனைவிடக் குறைவான நிர்ணய விலையையே அறிவித்திருக்கின்றனர்.

அவர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நெல்ஆலைஉரிமையாளர்களின்ஒத்துழைப்பு கிடைத்தமையால் அவர்களுக்கு இலாபம் கிடைக்கக் கூடிய தீர்மானங்களையே அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இதனால் அப்பாவி சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதற்காக மக்கள்வீதிக்கிறங்கிபோராடுவதற்குதயாராகிக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

# இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தி.. கால்கோல் விழா சிறப்புற்றது

(பேசன்)

யா/ இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியவித்தியாலயத்தில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை வரவேற்கும் கால்கோல் விழா நிகழ்வுகள் அண்மையில் இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம்பெற்றது.





வித்தியாலய அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் க.சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையின் பிரதி முகாமையாளர் ஆ.பரணனும் கலந்து சிறப்பித்ததுடன்-மாணவர்களுக்கு பரிசுப் பொருள்களையும் வழங்கி வைத்திருந்தனர்.

# வவுனியா சாரணர் சங்கத்தால் க்ளீன் சிறிலங்கா எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு பேரணி

இலங்கையின்77ஆவதுசுதந்திரதினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட சாரணர்கள் க்ளீன் சிறிலங்கா என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு பேரணி ஒன்றில் ஈடுபட்டனர்.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தில் இருந்து வவுனியா புதிய பஸ் நிலையம்வரை இந்மவிழிப்புணர்வுபேரணி இடம்பெற்றது.

வவுனியாமாவட்டசாரணஆணையாளர் யோ.கஜேந்திரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா பொலிஸ் நிலையத்தின்சமுதாயபொலிஸ்பொறுப்பதிகாரி, உதவி மாவட்ட ஆணையாளர்கள், பாடசாலை சாரணர் தலைவர்கள், பொறுப்பாசிரியர்கள், திரி சாரணர்கள், சாரணர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். 100









காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேச சபை ஊழியர்களுக்கான தொற்றா நோய்கள் பரிசோதனை மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச சபை ஊழியர்களுக்கான தொற்றா நோய்களுக்கான பரிசோதனை மற்றும் ஆலோசனை நிகழ்ச்சி திட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையில் காரைதீவு பிரதேச சபையில் நடைபெற்றது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், தாதிகள், பொது சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.











காலைக்கதிர் Kalaikkathir

# கையளிப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலைமாவட்ட,கிண்ணியாகல்விவலயத்திற்குட்பட்ட இரண்டு பாடசாலைகளில் புதன்கிழமை முஸ்லிம் எயிட் நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட கல்வி அபிவிருத்தி செயற்திட்டங்களை மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

சமூக பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது முஸ்லிம்எயிட் லண்டன்நிதிப்பங்களிப்புடன் முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா வினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற 4 ஆவது தொகுதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற இரண்டு பாடசாலைகள் புதன்கிழமை பயன்பெற்றன.

கடந்த 4 வருடங்கள் தொடர்ச்சியாக கிண்ணியா கல்வி வலயத்திற்குற்பட்ட இருபதிற்கும் மேற்பட்ட பின்தங்கிய மற்றும் தேவைகளையுடைய பாடசாலைகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளன.

வலயக் கல்வி அலுவலகத்தின் தர மேம்பாட்டிலும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டங்கள் மற்றும் நானாவித செயற்பாடுகளை மேம்படுத்துவதிலும் முஸ்லிம் எயிட் இன் பங்களிப்பு முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பது மிகையான கூற்றல்ல.

கிண்ணியாவலயக்கல்விபணிப்பாளர்இஸட்.எம்.எம்.முனவ்வரா நளீம் பிரதம அதிதியாகவும் முஸ்லிம் எயிட் பணிப்பாளர் பைசர் கான் கௌரவ அதிதியாகவும் பங்கேற்க 5 ஆம் திகதி காலை பாடசாலைபிரதானமண்டபத்தில்நடைபெற்றநிகழ்வில்வகுப்பறை தளபாடங்கள், புதிதாக நிர்மாணக்கப்பட்ட தண்ணீர் தாங்கி, மலசல கூடத்தொகுதி மற்றும் புனரமைக்கப்பட்ட விஞ்ஞான கூடம் என்பன அல் அதான் மகாவித்தியாலய பாடசாலை நிர்வாகத்தால் மற்றும் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.

புதன்கிழமை பிற்பகல் அரபா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கையளிப்பு நிகழ்வின் போது புனரமைக்கப்பட்ட தகவல் தொழில் நுட்ப கூடம், விஞ்ஞான கூடம், வகுப்பறைகள், நூலகம் மலசல கூடத்தொகுதி என்பன திறந்து வைக்கப்பட்டு கையளிக்கப்பட்ட அதேசமயம், மாணவர்களுக்கான வகுப்பறை தளபாடங்களும் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் முஸ்லிம் எய்;ட் நிறுவனத்தின் சிரேஷ்ட பணியாளர்கள் மற்றும் கள ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றோர்களும் பங்கேற்றனர்.

கிராத், வரவேற்புரைகள், வரவேற்புப்பாடல்கள் மற்றும் சிறார்களின் வரவேற்பு குழு நடணங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வைபவங்களில் விசேட அதிதி ஏ.சி.பைசர்கான் அவர்களினதும் வயலக்கல்வி பணிப்பாளர் திருமதி இசட்.எம்.எம். முனவ்வரா நளீம் அவர்களினதும் சிறப்புரைகள் இடம்பெற்றன.

குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சைகள் சாதனைகள் செய்த மாணவர்கள் மற்றும் பாடசாலைக்கு மிகுந்த அர்பணிப்புடன் பங்களிப்புகள் செய்த பெற்றோர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வுகளும், சிறப்பு மற்றும் கௌரவ அதிதிகளை கௌரவிக்கும் விசேட நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதே கிண்ணியா கல்வி வலயத்தில்அடங்கும்மேலும்இரண்டுபாடசாலைகளானபூவரசந்தீவு அல் மினா வித்தியாலயம் மற்றும் முள்ளிப்பொதான மத்திய கல்லூரி பாடசாலைகளும் மாணவச் செல்வங்களும் மறுநாள் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள திறப்புவிழா மற்றும் கையளிப்பு நிகழ்வுகளின் பயன்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





# மருத்துவ மாதுக்களுக்கு கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சுக வனிதையர் கிளினிக்கில் மிகவும்சிறப்பாகசெயற்பட்டுசிறந்த அடைவுகளை பெற்றுக் கொண்ட அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



குறித்த பொது சுகாதார மருத்துவ மாதுக்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.முனவ்வர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், அக்கரைப்பற்று மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுதீன், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







# ஆசிரியர் இடமாற்ற சபையை கூட்டாது இழுத்தடிக்கிறார்கள்

## வவுனியா தெற்கு வலய ஆசிரியர்கள் குற்றச்சாட்டு

வவுனியா தெற்கு வலய ஆசிரியர்களின் உள்ளக இடமாற்றம் தொடர்பில் இடமாற்ற சபையை கூட்டாது வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன் இழுத்துடிப்பதாக ஆசிரியர்கள் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்கான புதிய கல்வி ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி ஆரம்பித்து தற்போது முதலாம் தவணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வடக்கின் அனைத்து கல்வி வலயங்களிலும் உள்ளக இடமாற்ற சபை கூட்டமானது நிறைவடைத்து ஆசிரியர் இடமாற்ற விவரம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டமானது புதிய வலயக் கல்விப் பணிப்பாளரால் கூட்டப்படாது இழுத்தடிக்கபட்டு வருகின்றது.

இதன் காரணமாக இடமாற்றம் பெற வேண்டிய ஆசிரியர்கள் பலரும் தொடர்ந்தும் தூர இடங்களிலும், கஸ்ரப் பிரதேசங்களிலும் பணியாற்ற வேண்டியுள்ளதுடன், மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். 100



காலைக்கதிர் Kalaikkathir

# தனங்கிளப்பில் உப்பளத் திட்டத்தை மீள ஆரம்பித்து 1000 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்க நடவடிக்கை

(சுபேசன்)

தென்மராட்சிப்பிரதேசசெயலர்பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் கடந்த காலத்தில் தடைப்பட்ட உப்பு உற்பத்தி நிலையத்தை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கில் தேசிய உப்பு நிறுவனத் தலைவர் கடந்த புதன்கிழமை மேற்படி இடத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

புதிய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக உள்ளூர் உற்பத்தியை அதிகரித்தல்- இறக்குமதிச் செலவீனங்களை குறைத்தல் ஆகியவற்றுக்கு அமைவாக கடந்த காலத்தில் சாவகச்சேரி - தனங்கிளப்பு பகுதியில் இயற்கையாக உப்பு வளம் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்போது அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



கடந்த காலத்தில் மேற்படி உப்பள திட்டத்திற்கு பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் உரிய அனுமதிகள் ,பிரதேசசபையின் அனுமதி மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் பயனாளிகள் தெரிவு ஆகியன செய்யப்பட்ட போதிலும் சில காரணிகளால் தடைப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது மீளவும் அதனை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேற்படி திட்டம் ஊடாக பிரதேசத்தைச் சேர்ந்த வேலையற்றஇளைஞர்கள்,பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும்-

இந்த உப்பள நிறுவனம் தனியார் - பொதுமக்கள் பங்குடமை நிறுவனமாக செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விஜயத்தின் போது உப்பு நிறுவன தலைவர் ஹயன் வெல்லால மற்றும் பணியாளர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளி ஆசிரியர்கள் தொழிற்சங்கம் அமைப்பது அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க உதவும்

## சச்சிதானந்தன் தெரிவிப்பு



(சுபேசன்)

முன்பள்ளிஆசிரியர்கள்தொழிற்சங்கம்அமைப்பது அவர்களுடைய உரிமைகளை வென்றெடுக்க வழிவகுக்கும் என இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் ந.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

முன்பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளம் தொடர்பாக பலரும் பேசி வருகின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்களை பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் வடமாகாண கல்வியியலாளர்கள் பலரும் பக்கபலமாக இருப்பதில்லை.

அவர்களுடைய ஆதரவு இருந்தால் கல்வி அபிவிருத்திக் குழுமம் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விரைவாக ஏதேனும் செய்ய முடியும்.

முன்பள்ளிகள் பல திணைக்களங்களிடம் சிக்குண்டுள்ளன.

இவ்வாறான பிரச்சினைகளை அணுக மற்றும் ஆசிரியர்களின் சம்பள உயர்வு விடயம் தொடர்பாக தீர்வு காண முன்பள்ளி ஆசிரியர்கள் தொழிற்சங்கம் அமைப்பது சிறந்தது. தொழிற்சங்கம் அமைக்கும் பட்சத்தில் கல்வி அபிவிருத்திக் குழுமம் அதற்கு பக்கபலமாக இருக்கும்.

அத்துடன் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் நிதிப் பங்களிப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 60முன்பள்ளி ஆசிரியர்களும்,கிளிநொச்சி வளாகத்தில் 60ஆசிரியர்களும்,வவுனியா பல்கலைக்கழகத்தில் 40ஆசிரியர்களும் முன்பள்ளி டிப்ளோமாவை பயின்று வருகின்றனர்.

அடுத்த வருடமும் கல்வி அபிவிருத்திக் கழகத்தின் பங்களிப்போடு பல்கலைக்கழகங்களில் இந்த டிப்ளோமாகற்கைநெறி தொடரும். எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் குறித்த பல்கலைக்கழககங்களுக்கு விண்ணப்பித்து பயனடைய வேண்டும்.

தற்போதைய அரசாங்கமும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றது. ஆனால் அவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களுடைய சம்பள விடயத்தை எப்போது அணுகுவார்கள் என்று தெரியவில்லை.அதனால் கல்வி அபிவிருத்திக் குழுமம் அது சார்ந்து செயற்படுகின்றது. -என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.




# பெரும்போக நெற் செய்கையில் இம்முறை பெருமளவு வீழ்ச்சி

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவு தற்போது பெரும்போக நெற் செய்கை அறுவடை இடம் பெற்று வருகின்றது.

இயந்திரம் மூலமான அறுவடை தற்போது அரபா நகர் விவசாய பகுதியில் இடம் பெற்றாலும் அண்மையில் ஏற்பட்ட கனமழை , குளங்களின் வான் கதவுகள் திறப்பு காரணமாக விளைச்சல் குறைவு என கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் சுமார் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருந்த போதிலும் நெல்லுக்கான நிர்ணய விலை கிடைக்காமை , வெட்டுக் கூலி அதிகம் என பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.





பாரிய நஷ்டங்களை எதிர்கொள்கின்றோம் தற்போது ரூபா 15000 வரை ஏக்கருக்கு இயந்திர கூலி செலவாகிறது. விவசாயிகளுக்கு நன்மையான விடயங்களை பெற்றுத் தர வேண்டும். அப்போது தான் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அரசாங்கம் எங்களை பாதுகாக்க வேண்டும். பாரிய நோய் தாக்கம். விலை நிர்ணயத்தை விரைவில் செய்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பயிற்சியும் சான்றிதழும்

(தில்சாத் பர்வீஸ்)

முன்பள்ளி பிள்ளைகளின் சுகாதார மேம்பாடு தொடர்பான பயிற்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல். எம். ஹனீபா, உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்வி பணிப்பாளர் (முன்பள்ளி) எப். றிஸ்வி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம்.பைறோஸ், சம்மாந்துறை பிரதேச செயலக உளவள ஆலோசகர் எம். பர்ஸானா, முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 84 முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.





இந்நிகழ்விற்கு வளவாளராக சமூக வைத்திய நிபுணர் டாக்டர் எம்.ஐ.எம். ஹில்மியினால் முன்பள்ளி பிள்ளைகளின் சுகாதார மேம்பாடு பற்றி விரிவாக விளக்கப்பட்டது. அத்துடன், கல்முனை பிராந்தியசுகாதாரசேவைகள்பணிமனையின் தாய் சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் றிஸ்பின் வழங்கி வைத்தார்.

மேற்படி நிகழ்விற்கு, லயன்ஸ் கழகம் பிரதிநிதிகளாக எம்.டி.எம். அனகப் பொறியியலாளர், சாஹிர் அஹமட், எம்.டி.எம். பசீர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், நிகழ்விற்கு லயன்ஸ் கழகம் அனுசரணை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2025இல் வெளியிடப்பெற்றது